Signature valid

Signed by: Joint Director
Location:Tirunelveli
Date:2024.06.27

<u>மனைப்பிரிவு வரைபடம்</u>

<u>மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,</u>

திருநெல்வேலி மாவட்டம்,
நாங்குநேரி வட்டம்,
களக்காடு ஊராட்சி ஒன்றியம்
புலியூர்குறிச்சி ஊராட்சி
புலியூர்குறிச்சி கிராமம், சர்வே எண்: **696/4A,696/4B1** -ல் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம்

(திட்டமில்லா பகுதி)

இணையதள விண்ணப்ப எண்: GS78EA2C/2024

அளவு = 1:400

வ

குறிப்புகள்:

மனைப்பிரிவு இடத்தின் மொத்த பரப்பளவு	=	**24152.00** ச.மீ (5.968 ஏக்கர்)
மனைப்பிரிவு சாலையின் பரப்பளவு	=	**5887.00 ச.மீ**
மீதமுள்ள மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு	=	**18265.00 ச.மீ.**
மனைப்பிரிவு இடத்தின் எல்லை	=	
நிலையிலுள்ள சாலை	=	
மனைப்பிரிவு சாலை	=	

கோரிய மனைகளின் எண்ணிக்கை	-	107 எண்ணம்
ஒதுக்கிய மனைகளின் எண்ணிக்கை	-	107 எண்ணம்

<u>பொது ஒதுக்கீடுகள்:-</u>

பூங்கா 1 - 900.00 ச.மீ
பூங்கா 2 - 940.00 ச.மீ
மொத்தம் - 1840.00 ச.மீ (10.07%)

<u>புலியூர்குறிச்சி ஊராட்சிக்கு தானப்பத்திரம் எண்: 657/2024 நாள்: 14-06-2024 மூலம் ஒப்படைப்பு செய்யப்பட்ட பகுதிகள்</u>

1) மனைப்பிரிவு சாலை = 5887.00 ச.மீ
2) PUBLIC PURPOSE (A) = 100.215 ச.மீ (0.54%)
(உள்ளாட்சி உபயோகம்)

<u>தானப்பத்திரம் எண்: 656 /2024 நாள்: 14-06-2024 மூலம் TANGEDCO -க்கு ஒப்படைப்பு செய்யப்பட்ட பகுதி</u>

3) PUBLIC PURPOSE (B)
(TANGEDCO உபயோகம்) 100.215 ச.மீ (0.54%)

<u>மூலை முடக்கு</u>

மூலை முடக்கு-12.0மீ அகல சாலை வரை 1.50மீ x 1.50மீ விடப்பட வேண்டும்.

நிபந்தனைகள்:

1. அரசாணை நிலை எண்: 71 ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி நிர்வாகத் துறை நாள்: 16.08.2003 -ன் படி நில உரிமம் குறித்து உள்ளாட்சி உறுதி செய்து கொள்ள வேண்டும். அரசாணை நிலை எண்:181 மற்றும் 141 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை நாள்:09.12.2020 மற்றும் 16.07.2022-ன் படி மேற்படி மனைப்பிரிவில் உள்ள சாலைகள், மூலை முடக்கு மற்றும் பொது உபயோகம் ஒதுக்கீடு பகுதிகள் ஆகியவை உள்ளாட்சிக்கு தானப்பத்திரம் மூலம் மனுதாரரால் ஒப்படைப்பு செய்யப்பட்டது.

2. இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கும் முன் இவ்விடத்தில் எந்த துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை ஏதும் செய்யப்படவில்லை என்றும், நில ஆர்ஜித நடவடிக்கை தரக்கோரி மாவட்ட வருவாய் அலுவலரிடமிருந்து உத்தேசங்கள் ஏதும் பெறப்படவில்லை என்றும் உள்ளாட்சி உறுதி செய்து கொள்ள வேண்டும்.

3. நில உரிமம் குறித்து சமர்ப்பிக்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவை சரியானவையல்ல எனஅறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவிற்க்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி இரத்து செய்யப்படும்.

4. உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றி வருவாய்துறையின் மூலம் உட்பிரிவு செய்து அதற்கான விவரங்கள் பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

5. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எந்த வித மாற்றம் இன்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6 x4 என்ற அளவிலான நிரந்தர தகவல்பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக நிறுத்தப்பட வேண்டும்.

6. இம்மனைப்பிரிவில் அமையும் சாலையின் போக்கினை தடுக்கும் வகையில் சுற்று சுவர் எழுப்புதல் கூடாது.

<u>சிறப்பு நிபந்தனைகள்:</u>

வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), களக்காடு ஊராட்சி ஒன்றியம் அவர்களின் சான்று கடிதம் ந.க.எண்:ஆ3/469 /2022 நாள்: 28.02.2024-ல் களக்காடு ஊராட்சி ஒன்றியம் N.E.T - அணைக்கரை நம்பியாறு சாலை (R-107) தார் சாலை ஆகும். நீளம் 320.00 மீட்டர்.(வருவாய் துறை ஆவணத்தில் சாலையின் வடப்புறம் 7.5 மீட்டர் அகலமும், தென்புறம் 7.5 மீட்டர் அகலமும் உள்ளது.) இச்சாலை புலியூர்குறிச்சி ஊராட்சியில் ஏர்வாடி அணைக்கரை செல்லும் சாலையில் வலது பக்கம் உள்ளது.சர்வே எண்: 696/4A,4B1 கீழ்புறம் (692/3,696/3,696/4B2) வழியாக இச்சாலை செல்கிறது. இச்சாலை களக்காடு ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட கிராம ஊராட்சி தார் சாலை ஆகும் என சான்று வழங்கப்பட்டதன் அடிப்படையில் நகர் ஊரமைப்புத் துறையால் ஒப்புதல் வழங்கப்படுகிறது. நிலையிலுள்ள சாலையின் அகலம் 7.5 மீ அகலம் உள்ளதை வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) / தலைவர், புலியூர்குறிச்சி ஊராட்சி உறுதி செய்த பின்னரே இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

ம.வ/(தி.லி) /மா.ந.ஊ.அ.எண்: SWP/ 46 /2024

இணை இயக்குநர்
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
திருநெல்வேலி மாவட்டம்